DEPOSITION OF WITNESS

(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

**O.S.No. 422/2013**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : சீனிவாசகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.03.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14th March2024.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 3ம் வாதி. நான் இந்த வழக்கில் ஏற்கனவே வா.சா.1 ஆக எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து எனது தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுவின் பேரில் நான் மீண்டும் அழைக்கப்பட்டு எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. சீனிவாசன், ஜான்ரத்தினசாமி பெயரில் உள்ள பட்டா எண்.310 தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. புல எண்.30 க்குரிய புலப்பட நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** புல எண்.41க்குரிய புலப்பட நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** 1928 முதல் 1960 மற்றும் 1961 முதல் 1974 காலங்களுக்குரிய வில்லங்கசான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** கணினி பட்டா பட்டா எண்.10 தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்ய்பபடுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கில் நாங்கள் கோரிய பரிகாரம் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிராது 1ம் தபசில் சொத்தின் சர்வே எண்.30/1 ல் உள்ள சொத்து வடக்குபனவடலி வருவாய் கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து திருமலாபுரம் கிராம வருவாய் எல்லைக்குள் அமைந்திருக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 பட்டாவின் படி சர்வே எண்.30/1 என்பது 30/1A, 30/1B என உட்பிரிவு செய்ய்பபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பட்டாவில் சர்வே எண்.30/1B மட்டுமே இடம் பெற்றுள்ளது என்றாலும், 30/1A இல்லை என்றாலும் சரிதான். சர்வே எண்.30/1A என்பது தற்போது 4 ம் பிரதிவாதியின் மகன் முத்துப்பாண்டி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.30/1A க்கு 4ம் பிரதிவாதியின் மகன் முத்துப்பாண்டிதான் தீர்வை செலுத்திவருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.5 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் தபசில் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கு சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள உட்பிரிவுகளை மறைத்து நான் பிராது 1ம் தபசில் சொத்தில் கூடுதல் விஸ்தீரணத்தை காண்பித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**